100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!
ENSURE 100% VOTING!

பெருநகர சென்னை மாநகராட்சி
தேர்தல் செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண். 09 நாள்: 20.03.2019

**சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் ஊடக கண்காணிப்பு மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப, அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 18.04.2019 அன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019 மற்றும் எண்.12 பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் ஊடக கண்காணிப்பு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப, அவர்கள் இன்று (20.03.2019) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களின் விளம்பரங்களுக்கு அனுமதி வழங்கிடவும், நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் தேர்தல் குறித்த செய்திகள், விதிமீறல்கள் ஆகியவற்றை கண்டறியவும் மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழுவால் சான்றளிக்கப்பட்ட விளம்பரங்களை மட்டும் ஊடகங்கள் வெளியிட வேண்டும். அனுமதியின்றி வெளியிடப்படும் விளம்பரங்களை கண்காணிப்பதற்காக இந்த ஊடக கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஊடக மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தபின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் தொடர்பான விவரங்களை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக 1950 எண்ணுடன் கூடிய அழைப்பு மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அழைப்பு எண்ணிற்கு இதுநாள் வரை வந்த 11,197 அழைப்புகளுக்கு தகுந்த விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் 24 மணிநேரமும் இயங்கும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டு அறையில் ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தில் 48 பறக்கும் படை (FST) குழுக்கள், 48 நிலை கண்காணிப்பு குழுக்களின்

(SST) செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், சிவிஜில் செயலி (cVIGIL) மூலம் வரும் தேர்தல் தொடர்பான புகார்களும் இக்கட்டுப்பாட்டு அறையின் வாயிலாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சிகளில் அனுமதியின்றி வெளியிடப்படும் அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்களின் விளம்பரங்களை கண்காணிக்க தேர்தல் ஊடக கண்காணிப்பு மையம் இயங்கி வருகிறது. இம்மையத்தில் தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்கள் மற்றும் தேர்தல் தொடர்பான செய்திகள் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும்.

ஏற்கனவே சென்னை மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களில் இருந்த சுவர் விளம்பரங்கள், பேனர்கள் மற்றும் சுவரொட்டிகள் முழுவதுமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.உமாபதி அவர்கள், உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) திருமதி டி.ஜெயசீலா அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**